**காலி மாநகர சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 21 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 29 ஆந் திகதி சபைக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, காலி மாநகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சம்பளமற்ற விடுமுறைகளுக்காக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 1,453,130 தொகை மற்றும் ஆயர்வேத மருந்தகத்தின் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 295,919 தொகைக்கான மீதி இருப்பு என்பன நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடந்த ஆண்டின் பண்டக் கணிப்பீட்டின் பிரகாரம் அப்புறப்படுத்தப்பட்ட ரூபா 312,621 தொகைக்காக நிலையான சொத்துக்களின் கிரயம் நிலையான சொத்துக்களின் பெறுமதியில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது பல்வேறு நிறுவனங்களில் இருந்து நன்கொடையாக கிடைத்திருந்த 04 சொத்து வகைகள் மற்றும் ரூபா 164,450 தொகைக்கான நிழல் பிரதி இயந்திரமொன்றினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 101,792,235 தொகைக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது உடன்படிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருக்காத 33 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 20,797,463 தொகை நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற் கொண்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவுகள் மற்றும் கடன் கொடுத்தோர் அப் பெறுமதியினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) எத்திலிகொட ஹிம்புடுவ வத்த பாதையை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும், இரத்து செய்யப்பட்ட செயற்திட்டமொன்றென கடன்கொடுத்தோரிடம் ரூபா 287,842 தொகை குறைக்கப்பட்டிருந்தது.

(எ) காலி கீழ் டிக்ஷன் பாதையின் ஒரு பகுதியில் பக்க வடிகால் நிர்மாணிக்கும் நிர்மாண வேலை தொடர்பான கடன் கொடுத்தோர் ஏற்பாடுகளுக்காக ரூபா 1,026,460 தொகை மிகையாக ஒதுக்கப்பட்டிருந்தது.

(ஏ) நிர்மாண வேலை ஒன்றிற்காக ரூபா 721,754 தொகையான மொத்த தொகையும் செலுத்தியிருந்த போதிலும் கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஐ) வியாபார வரி வருமானம் ரூபா 2,886,100 தொகை மற்றும் களியாட்ட வரி வருமானம் ரூபா 381,409 தொகை என்பன மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஒ) ஆயுர்வேத கூட்டுத்தாபனத்திலிருந்து நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 3,085,505 தொகைக்கான மருந்து இருப்பினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஓ) முன்னைய ஆண்டுகளின் போது ரூபா 26,534,772 தொகையான நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் மிகை ஏற்பாடுகளை மீளாய்வாண்டின்போது சரிசெய்திருக்காமையினால் கடன்கொடுத்தோர் அப் பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 279,381,568 தொகையான 05 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே சமமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 10,120,162 ஆக இருந்தது.

### 1.3.3 தொங்கல் கணக்கு

2003 ஆண்டு முதல் காணப்படும் ரூபா 111,553 தொகைக்கான தொங்கல் கணக்கின் மீதி மீளாய்வாண்டின் போதும் இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

05 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 4,957,752 தொகைக்ககான 07 கணக்கு மீதிகளை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 176,625,737 தொகைக்கான பலவின கடன் கொடுத்தோர் மீதி மற்றும் ரூபா 115,197,426 இற்கான கலஞ்சியக் கடன் கொடுத்தோர் மீதி தொடர்பாக காலப்பகுப்பாய்வு ஒன்று மற்றும் அட்டவணைகள் தயாரித்திருக்காததுடன், அம் மீதிகளை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்குத் தேவையான சான்றுகள் இன்மை

---

**தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை**

---

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 188,001,769 தொகைக்கான 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின்போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

---

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாண ங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா. | |
| (அ) 1947 இன் 16 ஆம் இலக்க மாநகர சபைக் கட்டளைச் சட்டம் | | |
| பிரிவு 247(ஈ) | | மாநகர சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள ஏதும் அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் இருந்து வரி அறவீடு செய்தல் மேற்கொள்ளப் பட்டிருக்காதுடன், அவ்வாறான காணிகள் தொடர்பான பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப் பிரமாணம் 102 முதல் 110 வரை | - | இழப்புகள் தொடர்பாக பதிவேடு பேணப்பட்டிருக்காதுடன், உரிய அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 755(2) | 45,107,815 | கலஞ்சியத்தின் பௌதீக இருப்பு, பண்டப்பதிவேடு அல்லது பேரேட்டுடன் இணக்கஞ் செய்திக்காதுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காணப்பட்ட இருப்பு மீதி தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கு போதிய தகவல்கள் காணப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நிதிப் பிரமாணங்கள் 1645 மற்றும் 1646 | 13,085,269 | சபைக்கு சொந்தமான 133 வாகனங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 13,085,269 இற்கான எரிபொருள் செலவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்குச் சமர்பித்திருக்கவில்லை. |
| (இ) | 2014 பெப்ரவரி 24 திகதிய CSS/7/1/1/1 இலக்கம் கொண்ட பிரதான செயலாள ரின் (நிதி) சுற்றறிக்கை | - | நிதி மற்றும் கலஞ்சியங்களுக்கு பொறுப்பாக தற்போது சபையின் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் எவரிடமும் பிணைகள் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

### 1.3.7 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 85,306,803 தொகைக்கான இருப்பு மீதியில் ரூபா 45,615,140 தொகை மாநகர சபை கட்டளை சட்டத்தின் 266(அ) பிரிவின் பிரகாரம் அமைச்சரின் அங்கீகாரம் பெற்று கொள்ளாமல் பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 198,808,270 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 128,351,803 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் பேணப்படும் 02 நடைமுறைக் கணக்குகள் தொடர்பாக ரூபா 278,053 தொகையான வரவு வைத்தல்களும், ரூபா 1,316,335 இற்கான செலவு வைத்தல்களையும் தீர்ப்பதற்காக மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்காததுடன், சில விடயங்கள் தீர்க்கப்படாமல் 15 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்பட்டது.

(ஆ) சபையின் 04 நடைமுறைக் கணக்குகளில் காணப்பட்ட ரூபா 27,778,529 இற்கான சராசரி மாதாந்த மீதியினை மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 187 ஆம் பிரிவின் பிரகாரம் பிணைமுறிகளில் முதலீடு செய்யப்படாமையினால் சபைக்கு பெற்று கொள்ளக் கூடியதாக இருந்த வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.

(இ) நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1993 நவம்பர் 18 ஆம் திகதிய 15 ஆம் இலக்க திட்டமிடல் சுற்றறிக்கையின் பிரகாரம் சபையின் பேரில் ஆரம்பிக்கப்பட்டிருந்த கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய, 2015 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதிவரையான காலப்பகுதி தொடர்பான ரூபா 768,963 தொகை சேமிப்பு கணக்கிற்கு மாற்றப்படாமல் பொது கணக்கிலேயே தடுத்து வைக்கப்பட்டு காணப்பட்டது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 83,010,000 | 90,149,355 | 100,394,779 | 137,776,385 | 75,252,000 | 88,075,816 | 82,601,810 | 138,093,351 |
| வாடகை | 80,292,000 | 33,403,743 | 43,777,996 | 28,588,585 | 122,465,000 | 26,779,527 | 65,895,857 | 20,534,897 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 33,004,000 | 14,663,088 | 40,214,605 | 11,537,062 | 24,614,500 | 10,270,361 | 25,003,030 | 6,047,154 |
| ஏனைய வருமானங்கள் | 540,675,000 | 119,737,551 | 343,683,541 | 296,555,871 | 527,507,000 | 118,811,159 | 394,058,863 | 200,746,239 |
| மொத்தம் | 736,981,000 | 257,953,737 | 528,070,921 | 474,457,903 | 749,838,500 | 243,936,863 | 567,559,560 | 365,421,641 |

### 2.3.2 வருமானம் சேகரித்தலினை செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்காக மதிப்பிடப்பட்ட மொத்த வருமானம் ரூபா 736,981,000 தொகையாக காணப்பட்டதுடன், சிட்டையிடப்பட்ட வருமானம் 257,953,737 தொகை ஆக இருந்தது. ஆரம்ப மீதி ரூபா 365,421,641 தொகையுடன் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 623,375,378 தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 528,070,921 தொகையாகக் காணப்பட்டமையினால் வருட இறுதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 474,457,903 தொகையாகக் காணப்பட்டது.

### 2.3.3 வீதவரியும் வரியும்

(i) மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய வீதவரி வருமானத்தில் இருந்து அறவீடு செய்தல் 44 சதவீதமாகக் காணப்பட்டதுடன் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 252(அ) மற்றும் (ஆ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 2017 இரண்டாம் காலாண்டு வரையான நிலுவை வீதவரி ரூபா 195,079,776 தொகையினை அறவீடு செய்வதற்கான அட்டவணைகளை ஆதனங்கள் தடைசெய்யும் உத்தியோகத்தர்கள் 16 பேருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 19,186,570 இற்கான வரி அறவிடப்பட்டிருந்தது. ஆதனங்களை தடைசெய்யும்

உத்தியோகத்தர்களுக்கு அதற்கான தரகாக ரூபா 1,748,241 தொகை செலுத்தியிருந்ததுடன், 02 ஆம் இலக்க வட்டாரத்தில் நிலுவை வீதவரியில் 1.5 சதவீதமே அறவிடப்பட்டிருந்தது.

**2.3.4 வாடகை**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை வாடகை மீதி ரூபா 28,588,585 தொகையாக காணப்பட்டமையால் ஆரம்ப மீதிக்கு ஒப்பாக ரூபா 8,053,688 தொகையினாலும் அதிகரித்திருந்தது. நிலுவை வாடகை அறவீடு செய்வதற்காக மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 170(அ)(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.3.5 அனுமதிப் பத்திரக் கட்டணம்**

மீளாய்வாண்டிற்கான சிட்டையிடப்பட்ட வருமானம் மதிப்பீட்டு வருமானத்தில் 44 சதவீதமான குறைந்த பெறுமதியினை கொண்டிருந்தது. மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் மீதி வருட இறுதி அளவில் ரூபா 5,489,908 இனால் அதிகரித்திருந்தது. நிலுவை வருமானம் அறவீடு செய்தல் தொடர்பாக மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 170(அ)(1) பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.3.6 ஏனைய வருமானங்கள்**

மீளாய்வாண்டின் மற்றும் முன்னைய ஆண்டின் மதிப்பீட்டு வருமானத்திற்கு, ஒப்பாக ஒவ்வொரு வருடத்திற்குமான சிட்டையிடப்பட்ட வருமானம் 22 சதவீதம் அளவு குறைந்த பெறுமதியினை பெற்றிருந்தது. வருட ஆரம்பத்தில் காணப்பட்ட ஏனைய வருமானங்களின் ரூபா 200,746,239 தொகைக்கான நிலுவை மீதி வருட இறுதி அளவில் ரூபா 296,555,871 தொகை வரை ரூபா 95,809,632 இனால் அதிகரித்திருந்தது.

**2.3.7 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

போதியளவான பதிவேடுகள் பேணப்படாமையால் மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களிடம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் தொடர்பாக தகவல்கள் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது பெருந் தெருக்கல் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல், நிர்வாகித்தல், பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதிகள் மற்றும் நலனோம்பு ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் சபையினால் நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

ஆக்கப்பட்டுள்ள துணை விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிக் காணப்பட்ட செய்பணிகள் தொடர்பாக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**(ஆ) எதிர்ப்பார்த்த வெளியீட்டு மட்டத்தை பெற்றிருக்காமை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சுகாதார பரிசோதக உத்தியோகத்தர்களினால் தமக்கு உரிய வலயங்களில் செயற்படுத்த வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தியிருக்காதுடன், அது தொடர்பாக மேல் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ii) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் புவியியல் தகவல் முறையொன்று நிறுவுவதற்காக 2013 ஜனவரி 02 திகதி ரூபா 2,055,000 இற்கான தொகைக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டிருந்ததுடன், அந்த முறைமையை நிறுவி, 2013 ஜூலை 02 திகதி அல்லது அதற்கு முன்னர் மாநகர சபைக்கு ஒப்படைக்க வேண்டியிருந்தது. உடன்பட்ட தொகைக்கு மேலதிகமாக ரூபா 2,026,950 தொகை இதற்காக செலவிடப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 2018 ஆகஸ்ட் அளவில் 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும், செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(இ) செய்பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 247(ஆ) இன் கீழ் சபையின் அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் மற்றும் 247(இ) பிரிவின் கீழ் வர்த்தக மற்றும் திறன் தொழில்கள் தொடர்பாக வருடாந்த வரி தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், அது தொடர்பாக வருடாந்த கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்ட பதிவேடுகள் நாளது வரை ஆக்கப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டிற்காக கணிப்பீட்டு அலுவல்கள் வருட இறுதி அளவிலும் பூர்த்தி செய்திருக்கவில்லை.

(ஈ) காலி மாநகர சபை விளையாட்டுத்திடலை இலங்கை கிரிக்கட் நிறுவனத்திற்கு வாடகைக்கு கொடுத்த போது, 2008 ஏப்ரல் 20 திகதி முதல் 2018 ஏப்ரல் 19 திகதியில் முடிவடையும் II ஆம் காலப்பகுதிக்கான உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி மற்றும் குறிக்கோள்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

**(ஊ) திண்மக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம்**

சபையின் அதிகார பிரதேசத்தில் சேகரிக்கப்படும் உக்கக் கூடிய குப்பைகள் ரக்கம மொன்டோவியா தோட்டத்திலுள்ள குப்பை முற்றத்திற்கு மற்றும் உக்காத குப்பைகள் ஹீன்பந்தல குப்பை தோட்டத்தில் குவிக்கப்பட்ட போதிலும், 2017 ஏப்ரல் 20 திகதிய 2015/53 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2017 மே மாத மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் குப்பை முகாமைத்துவத்திற்காக நீண்டகால திட்டமொன்று காணப்படவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது நகர பொறியியலாளர் பிரிவில் விடுமுறை நாள் சம்பளம் செலுத்தும் போது உள்வருதல் மற்றும் வெளிச் செல்லல் போதியளவில் உறுதிப்படுத்தாமல் முற்றாக ஒவ்வொரு உத்தியோகத்தினரினதும் அழைப்பு நாட் குறிப்புப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தை அடிப்படையாகக் கொண்டு 06 உத்தியோகத்தர்களுக்காக விடுமுறை நாள் சம்பளமாக ரூபா 443,471 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்கு சொந்தமான JCB, றோடர் மற்றும் எக்ஸ்கவேடர் 07 இயந்திரங்கள் பயன்பாடு குறைந்த மட்டத்தில் காணப்பட்ட போதும் ஹீன்பெந்தல குப்பை தோட்டத்தில் வேலைக்காக 2013 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரை சபை நிதியத்தில் இருந்து ரூபா 27,857,288 தொகை செலுத்தப்பட்டு JCB இயந்திரம் ஒன்று மற்றும் எக்ஸ்கவேடர் இயந்திரம் ஒன்றும் வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்தது.

(இ) மொஹொதீன்வத்த சனசமூக நிலைய கட்டிடத்தினுல் நிறுவப்பட்டுள்ள உடல் விருத்தி நிலையத்திற்காக ரூபா 1,325,630 தொகை பெறுமதியான உடல் விருத்தி உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், இருப்பு பதிவேடு ஒன்று பேணியிருக்கவில்லை. அதன் பொறுப்பாளராக சாக்கடை பவுசர் மேற்பார்வைக்காக மாதாந்தம் 150 மணித்தியாளங்களுக்காக 2017 ஆண்டின் போது ரூபா 148,222 இற்கான மேலதிக நேரப்படி செலுத்தப்பட்டிருந்தது. உடல் வளர்ச்சி நிலையத்திற்கு பயிற்றப்பட்ட ஆலோசகர் ஒருவர் சேவையை பெற்றிருக்காததுடன் நிலையத்தை பயன்படுத்துவோரின் பதிவு செய்யப்பட்ட பெயர் பதிவேடு ஒன்று காணப்படவில்லை. அங்கத்தவர் ஒருவரிடம் சேகரிக்கப்படும் ரூபா 250 தொகை அங்கத்துவ கட்டணம் சனசமூக அபிவிருத்தி சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் நீர் மற்றும் மின்சார சிட்டைகள் சபை நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது. உடல் வளர்ச்சி நிலைய அலுவல்கள் தொடர்பாக கணக்கு அறிக்கைகள் வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி குழுவிற்கு சமர்பித்திருக்கவில்லை.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் மேலதிகமாக சேர்க்கப்பட்டிருந்த ஊழியர்கள் 10 பேர்களை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்காததுடன், 145 ஊழியர் வெற்றிடங்களுக்கு ஊழியர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையில் கட்டமையாற்றிய 26 உத்தியோகத்தர்களுக்கு வழங்கியிருந்த ரூபா 1,191,804 இற்கான கடன் மீதியை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.4 செயற்பாட்டு திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாநகர சபையின் சமூக அபிவிருத்தி அலகிற்கு உரிய வருடாந்த செயலாற்றுகை திட்டமொன்று காணப்படாததுடன், மேற்கொள்ளப்படும் கருமங்கள் தொடர்பாக பதிவுகள் பேணப்படல் அல்லது இனங்காணப்பட்ட குறைபாடுகள், உத்தேசித்த நடவடிக்கை மற்றும் அதற்காக எடுக்கப்பட்ட சரிசெய்யும் நடவடிக்கைகள் ஏதும் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 247(அ) இன் பிரகாரம் சுற்றுலா சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள், தங்குமிடங்களில் இருந்து 1 சதவீத அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்யும் போது இணையத்தள தகவல்களின் படி, நகர் சார் அதிகார பிரதேசத்தில் சுற்றுலா சபையினால் அங்கிகரிக்கப்பட்ட ஹோட்டல்களின் எண்ணிக்கை 424 தொகை இனங்காணக் கூடியதாக இருந்த போதிலும், சபையினால் 14 அலகுகளில் இருந்து மாத்திரம் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. மாநகர சபையினால் அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடப்பட்டு காணப்படும் 02 ஹோட்டல்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,325,883 தொகை தொடர்பாக நடவடிக்கைகள் ஏதும் எடுத்திருக்கவில்லை. அதே போல் கடந்த 08 வருடங்களை விட மிகையான காலம் அனுமதிப் பத்திரக் கட்டணம், பெறுவனவுகளில் இருந்து 1 சதவீதம் அறவிடப்பட்டிருந்ததுடன், 2017 ஆண்டின் போது 0.5 சதவீதம் என குறைக்கப்பட்டு மீண்டும் 2018 ஆண்டின் போது 1 சதவீதம் என வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் ஏல விற்பனை காணிகள் தொடர்பாக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டின் ஏல விற்பனை வருமானத்தின் 1 சதவீத கட்டணம் அறவீடு மற்றும் ஏல விற்பனை காணிகளின் அளவுகளின் அடிப்படையில் பொது வசதிகள் வழங்குவதற்காக சபைக்கு சாட்டப்பட்டுள்ள 10 சதவீத காணிப் பகுதிகள் கிடைத்தல் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### வாகனப் பயன்பாடு

சபைக்குச் செந்தமான 133 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் பதிவேடு மற்றும் ஓட்ட அட்டவணை புத்தகங்கள் முறைப்படி கலஞ்சியப்படுத்தியிருக்கவில்லை. குழாம் வாகனங்களுக்காக இணைக்கப்படட்டிருந்த அனைத்து சாரதிகள் 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரிவு 06 இன் பிரகாரம் பொது 268 மற்றும் 268 (அ) இலக்கம் கொண்ட சாரதிகள் கைநூல் ஒன்று மற்றும் உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக இணைக்கப்பட்டுள்ள சாரதிகள் 13/2008 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை பிரகாரம் படிவம் ஒன்று பேணப்பட வேண்டுமெனினும், அவ்வாறான படிவங்கள் ஏதும் கணக்காய்விற்காக சமர்பித்திருக்கவில்லை.

## 3.6 இனங்கானப்பட்ட நட்டங்கள்

2012 மார்ச் 23 திகதி முதல் 30 ஆம் திகதி வரை இலங்கை இங்கிலாந்து கிரிக்கட் போட்டியின் களியாட்ட வரி என அறவிடப்பட வேண்டிய தொகைக்காக முன்னைய போட்டிகளின் போது விற்பனை செய்யப்படாத சிட்டைகளுக்காக வைப்பு செய்யப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 5,585,673 தொகை பதிலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இந்த தொகை 2016 செப்தெம்பர் 21 திகதி மீண்டும் கிரிக்கெட் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், அது மாநகர சபை நிதியத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டமொன்று என இனங்காணப்பட்டிருந்தது.

## 3.7 பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டின் போது சபையினால் வேலைகள், சேவைகள் மற்றும் பண்டங்கள் அல்லது பொருட்கள் பெற்றுக் கொள்ளல் தொடர்பாக பெறுகை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுக்கு இடையே கீழ் விவரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 04 வருமான விடயங்களில் நெருங்கியிருக்காத இலக்காகிய வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 124,338,203 தொகையாக காணப்பட்டதுடன், அப் பெறுமதி 22 சதவீதம் முதல் 80 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சு ஒன்றில் இருந்தது.

(ஆ) 09 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 209,622,354 தொகைக்கு சேமிப்பு காணப்பட்டதுடன், அப்பெறுமதி 21 சதவீதம் முதல் 58 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த உள்ளக் கணக்காய்வுத் திட்டம், உள்ளுராட்சி ஆணையாளரின் (தென்மாகாண) 2014 பெப்ரவரி 24 ஆம் திகதிய தபபா/யஹ/01/நசலே இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரித்திருக்கவில்லை.

(ஆ) அங்கீகரிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் செயற்பாட்டு, மாதாந்தம், காலாண்டு, உள்ளகக் கணக்காய்வு அறிக்கை சமர்பித்திருக்கவில்லை. அறையாண்டு மற்றும் ஆண்டறிக்கைகள் மாத்திரம் முகாமைத்துவத்திற்கு சமர்பித்திருந்த போதிலும், அவ் அறிக்கைகளில் குறிப்பிட்டுள்ள சில அவதானிப்புக்கள் தொடர்பான சரிசெய்யும செயற்பாடுகள் எடுக்கப்பட்டிருக்கவல்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

2009 ஜுன் 09 ஆம் தககியில் DMA/2009(i) இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நடத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் ஒன்று மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | | குறைபாடு |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு மற்றும் பதிவேடுகள் பேணல் | (i) | நீண்ட காலம் முதல் முன்கொண்டுவரப்பட்ட கணக்கு மீதிகளை தீர்த்திருக்கவில்லை. |
| | | (ii) | நிதிக் கூற்றுக்கள் மற்றும் பதிவேடுகள் காணப்படும் |

| | | | |
|---|---|---|---|
| | | | கணக்கு மீதிகளில் வித்தியாசங்கள் காணப்படல் |
| | | (iii) | கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் பதிவேடு காலப்பகுப்பாய்வு காணப்படாமை. |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் | (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்படாமை |
| | | (ii) | பதியப்பட்டுள்ள இருப்பு மற்றும் பௌதீக ரீதியான இருப்பு ஆகியவற்றிற்கு இடையே காணப்படும் வித்தியாசங்களை சரிசெய்யாமை. |
| (இ) | வாகன கட்டுப்பாடு | (i) | வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்திருக்காமை |
| | | (ii) | வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்காமை. |
| | | (iii) | சிதைவடைந்த வாகனங்களை அகற்றுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்காமை |
| (ஈ) | வருமானம் சேகரித்தல் | (i) | நிலுவை வருமானம் அறவீடு செய்திருக்காமை. |
| | | (ii) | சிட்டையிடக்கூடிய அனைத்து வருமானங்களுக்கும் சிட்டையிட்டிருக்காமை |
| (உ) | பதவியணி முகாமைத்துவம் | (i) | வெற்றிடங்களை நிரப்புவதற்கு மற்றும் மிகைப் பதவியணிகளை முறைப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| | | (ii) | நிலுவை பதவியணி கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை |
| (ஊ) | பாதீட்டு கட்டுப்பாடு | | பாதீடு தொடர்பாக தொடர் செயல் நடவடிக்கை மேற்கொண்டு திருத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்காமை. |